**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093661

1. District : மாவட்டம் திருப்பூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரி | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 08/2019/AC/TPR | Date: நாள் 23.10.2019

2. (i) Act சட்டம்: Prevention of corruption (Amendment) Act, 2018 | Sections பிரிவுகள்: 7, 7(A)
   (ii) Act சட்டம்: CrPC | Sections பிரிவுகள்: 102
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 22.10.2019 18 மணி முதல் 19.15 மணி வரை | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.10.2019 | Time : நேரம் 16.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD-Vol. III | Time : நேரம் 16.30 hrs.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் மேற்கு 5 கி.மீ, தென் கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி திருப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருப்பூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ப. துரைசாமி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மாவட்ட இயக்குநர் அலுவலர். | (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயமுத்தூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) திரு. V. சௌந்தரராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ), திருப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருப்பூர் (2) திரு. தமிழ்செல்வன், மேலாளர், பொறியாளர் ஊராட்சி, (3) திரு. மகேஷ், ஓட்டுனர், வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம், (4) திரு. செந்தில், உதவியாளர், ஊரக வளர்ச்சி துறை (5) திரு. மணிகண்டன், சிவில் இன்ஜினியர் தொழில் [illegible]

8. Reasons for delay in reporting by the complainant / Informant :
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைபைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/10/19 | 23/10/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.10.2019.

Name: பெயர் R. [illegible]
Rank:, நிலை காவல் ஆய்வாளர் No. எண்
உணவுப் தடுப்பு மற்றும்
குற்றப்புலனாய்வு பிரிவு,
[illegible]

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p.2

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 8/2019/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி..***

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 23.10.2019-ம் தேதி 16.30 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.ப.துரைசாமி அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விபரம் பின் வருமாறு. அனுப்புநர் ப.துரைசாமி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் - 641 018. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ந.க.எண்.377/2019/ஐ1, நாள்.23.10.2019 அம்மையீர், பொருள்:திடீர் தணிக்கை - திருப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலகம்- புகார் மனு - தொடர்பாக. நேற்று 22.10.2019 ஆம் தேதி திருப்பூர் கோர்ட் வீதியில் உள்ள திருப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் வருகிற தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தங்களுக்கு கீழ் பணிபுரியும் ஊராட்சிகளின் செயலாளர்களிடமும், சைட் அப்ரூவல் வழங்குவதற்காக பொதுமக்களிடமிருந்தும் மற்றும் பஞ்சாயத்து சம்பந்தமான வேலைகளைச் செய்யும் ஒப்பந்ததாரரிடமும் லஞ்சமாக பணம் கேட்டுப் பெறுவதாக கிடைக்கப் பெற்ற நம்பகமான தகவலின் பேரில் நேற்று 19.15 மணியிலிருந்து 22.00 மணி வரை திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது அங்கிருந்த ஊராட்சி செயலாளர்களிடமிருந்தும், ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் பணம் ரூ.82,875/- (ரூபாய் எண்பத்து இரண்டாயிரத்து எண்ணூற்று எழுபத்து ஐந்து மட்டும்) கைப்பற்றப்பட்டது. இதற்காக திடீர் தணிக்கை நடவடிக்கைகள் தயாரிக்கபட்டது. இந்நேர்வில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.82,875/-, Chenthoor Agencies என்று அச்சிடப்பட்ட காக்கிநிற கவர், அவ்வலுவலக வருகைப் பதிவேடுகளின் சான்றிடப்பட்ட நகல்கள் மற்றும் திடீர் தணிக்கை நடவடிக்கைகள் ஆகியவற்றை இணைத்துள்ளேன். ஒப்பம் xxxx (ப.துரைசாமி) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,

கோயம்புத்தூர். இணைப்பு: மேற்கண்டுள்ளவாறு. Sir, Received the complaint along with cash Rs.82,875/-, documents and proceedings on 23.10.2019 at about 16.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.08/2019/AC/TPR u/s 7, 7(A) of P.C (Amendment) Act 2018 and 102 Cr.P.C. ஒப்பம் xxxx R.எழிலரசி Inspr.VAC, TPR 23.10.19. 22.10.2019-ம் தேதி மாலை 19.15 மணிக்கு திருப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட திடீர் தணிக்கை நடவடிக்கையின் விபரம் பின்வருமாறு. திடீர் தணிக்கையின் நடவடிக்கைகள் முன்னிலை: 1) ப.துரைசாமி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை 2) திருமதி.R.எழிலரசி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். இன்று 22.10.2019 ஆம் தேதி கோயம்முத்தூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான், பணியில் இருந்த போது, திருப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களும், ஊழியர்களும் வருகிற தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஊராட்சிகளின் செயலாளர்களிடமிருந்தும், வீட்டு மனை அங்கீகாரம் பெறுவதற்கு வரும் பொதுமக்களிடமிருந்தும் ஊராட்சி ஒன்றிய வேலைகளைச் செய்யும் ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் மற்றும் இதர பணிகளுக்காக அலுவலகம் வரும் பொதுமக்களிடமிருந்தும் இலஞ்சமாக பணம் கேட்டு பெறுவதாக கிடைக்கப் பெற்ற நம்பகமான தகவலையடுத்து, திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் காவல் பார்ட்டியினர் சகிதம் இந்த திருப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை இன்று 19.15 மணிக்கு திடீர் தணிக்கை மேற்கொண்டோம். இந்த திடீர் தணிக்கை சகிதம் திருப்பூர் கோர்ட் வீதி, இந்தியன் வங்கி எதிரே இருக்கும் கிழக்கு பார்த்தவாறு இருக்கும் திருப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குள் நுழைந்து முதலில் கிழக்கு பார்த்தவாறு இருந்த் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அறைக்கு சென்ற போது, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.வே.கனகராஜ் அவர் இருக்கையில் வடக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்தார். அந்த அறையில் பின்னர் பெயர் கேட்டு தெரிந்த பெருமாநல்லூர் ஊராட்சியின் செயலாளர் திரு.பி.மகேஷ், பொங்குபாளையம் ஊராட்சியின் செயலாளர் திரு.கே.ஆர்.தமிழரசன் மற்றும் தனிநபர் திரு.கே.மணிகண்டன் ஆகியோர்கள் இருந்தனர். இவர்களில் பெருமாநல்லூர் ஊராட்சி செயலாளர் திரு.மகேசை தணிக்கை செய்ய, அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்து பணம்

ரூ.4,560/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து கேட்க அவர் முன்னுக்கு பின்முரணாக பதிலளித்தார். எனவே அந்தப் பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் தனிநபர் திரு.மணிகண்டன் அவர்களை தணிக்கை செய்ய அவர் தானாகவே தனது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.10,360/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அவரை விசாரிக்க அவர் தான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாகவும், சைட் அப்ரூவல் வாங்குவதற்காக வந்திருப்பதாகவும் கூறினார். பின்னர் பணம் ரூ.10,360/-ஐக் குறித்து கேட்க அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் சென்னார். எனவே அப்பணம் ரூ.10,360/-ம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் பொங்குபாளையம் ஊராட்சி செயலாளர் தமிழரசனை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் பின்பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ. 51,850/- இருந்ததை எடுத்டு ஆஜர் செய்தார். இப்பணம் குறித்து விசாரிக்க முன்னுக்கு பின்முரணாக பதிலளித்து விட்டு, பின்னர் ரூ.850/- தனது சொந்தப் பணம் என்றும், ரூ.51,000/- தன்னுடைய பகுதியில் சைட் அப்ரூவலுக்காக வந்த பொதுமக்களிடம் வட்டார வளர்ச்சி அலுவலர் கனகராஜ்-ற்காக வாங்கிய இலஞ்ச பணம் என்றும், அதை அவருக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் கூறினார். எனவே அந்த ரூ.51,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக வட்டார வளர்ச்சி திரு.வே.கனகராஜ் அவர்களை விசாரிக்க, அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் வலது பக்க பேண்டின் பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.1,380/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து விளக்கம் கேட்க, அவர் அது தனது சொந்த பணம் என்று கூறினார். எனவே அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அவருடைய டேபிளின் வலது பக்க டிராயரை தணிக்கை செய்ய, அதிலிருந்த CHENTHOOR AGENCIES என்று அச்சிடப்பட்ட காக்கி கவரில் பணம் ரூ.3,500/- இருந்தது. அது குறித்து கனகராஜிடம் விளக்கம் கேட்க, அந்த டிராயரையே தான் பணியேற்ற நாளில் இருந்து திறந்து பார்த்ததில்லை என்றும், அந்தப் பணம் எப்படி வந்ததென்று தெரியவில்லை என்றும் கூறினார். எனவே அந்தப் பணம் கவர் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக பின்புறமுள்ள பொறியாளர் பிரிவுக்கு செல்ல, அந்த அறையின் தென்மேற்கு பகுதியில் உள்ள அறையில் உதவி பொறியாளர் திரு. ஜி.ஆர்.முத்துக்குமார் அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார், அவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தனது சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து

பணம் ரூ. 860/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது அவருடைய சொந்தப்பணம் என்று அவர் கூறியதால் அவரிடமே அப்பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக வடமேற்கே இருந்த அறையில் உதவிப்பொறியாளர் திரு.கே. இளங்கோ அவர் இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய, அவர் தானாகவே தன்னுடைய சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.810/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதால் அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக முன்னால் இருந்த ஹாலில் கிழக்கு பார்த்தவாறு இருக்கையில் அமர்ந்திருந்த சாலை ஆய்வாளர் திருமதி.ஆ.லதா என்பவரை தணிக்கை செய்ய, அவர் தானாகவே தன்னுடைய பர்சில் இருந்து ரூ.40/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்தபணம் எனக் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அந்த அறையில் இருந்த கணினி விபரப்பதிவாளர் செல்வி.எஸ்.லீலாவதி என்பவரை தணிக்கை செய்ய, அவர் தானாகவே தன்னுடைய கைப்பையில் இருந்து பணம் ரூ.210/-இ எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து கேட்க அவர் தன்னுடைய சொந்தபணம் என்று கூறியதால் அந்தப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அந்த ஹாலில் இருந்த கணினி விபர பதிவாளர் செல்வன்.எஸ்.சூர்யா என்பவரை தணிக்கை செய்ய பணம் ரூ.10/- இருந்ததை தனது சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து தானாகவே எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதால் அவரிடமே அந்தப் பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரை விசாரிக்க தான் உதவி பொறியாளர் முத்துக்குமார் வேலைக்கு அழைத்ததால் வந்திருப்பதாகவும், இங்கு ஆறு மாதமாக வேலை செய்வதாகவும், இதற்கு உதவி பொறியாளர் முத்துக்குமார் பணம் ரூ.7,500/- மாதாமாதம் கொடுப்பதாகவும் கூறினார். அடுத்ததாக அந்த அறையில் இருந்த பின்னர் பெயர் கேட்டு தெரிந்த ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சிவன் என்பவரை தணிக்கை செய்ய, அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் பின்பக்க பாக்கெட்டில் இருந்து ரூ.9,300/-பணம் இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அவரை விசாரிக்க தான் அரசு ஒப்பந்ததாரராக கடந்த 15 வருடமாக இங்கு வேலை செய்து வருவதாகவும், தன்னுடைய வேலை செய்த பில் நிலுவையில் இங்கு இருப்பதாகவும், அதை குறித்து கேட்க வந்திருப்பதாகவும் சொன்னார். பின்னர் பணம் ரூ.9,300/- குறித்து அவரிடம் விசாரிக்க, அவர் முன்னுக்குபின் முரணாக பதில் கூறினார். எனவே அப்பணம்

கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்த ஹாலில் இருந்த தனிநபர் திரு.கே.ஆனந்த் என்பவரை விசாரிக்க, அவர் டிரைவராக இருப்பதாகவும், வாடகை பாக்கியை உதவி பொறியாளர் திரு.முத்துக்குமாரிடம் இருந்த வாங்க வந்ததாகவும் கூறினார். அவரை தணிக்கை செய்ய பணம் ரூ.2,300/- இருந்ததை தனது சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து தானாகவே எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே அந்தப் பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இந்த வளாகத்தின் வடக்குபக்கமாக இருந்த அலுவலகத்திற்குள் நுழைந்த போது கிழக்கு பார்த்தவாறு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்) திரு.ஆர்.பழனிச்சாமி அமர்ந்திருந்தார். அவரை விசாரிக்க அவர் தன்னுடைய பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.650/- எடுத்து தானாகவே ஆஜர் செய்தார். அது குறித்து கேட்க, அவர் தன்னுடைய சொந்தப்பணம் என்று சொன்னதால் அவரிடமே அப்பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக பழனிச்சாமி இருக்கைக்கு அருகே இருந்த தெற்குபார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பெருமாநல்லூர் ஊராட்சியின் நூறுநாள் வேலை பணித்தள பொறுப்பாளர் திரு.என். ஜெயகணேஷ் என்பவரை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.690/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதால் அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த தெற்குபார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த நூறு நாள் வேலைவாய்ப்புத்திட்ட கணினி உதவியாளர் திரு.சி.பாண்டியராஜ குமாரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.101/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அது தன்னுடைய சொந்தபணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக தெற்குப்பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த கணக்கம்பாளையம் ஊராட்சி செயலாளர் திரு. பி. செந்தில் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய சட்டையின் மேல்பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.4,155/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து கேட்க, அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதால் அப்பணமும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக மேற்படி இருக்கைக்கு அடுத்தாற்போல், தெற்குபார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பதிவறை எழுத்தர் திரு.வி.மோகன்குமாரை தணிக்கை செய்ய அவர்

தானாகவே தன்னுடைய சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.410/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதால் அவரிடமே அப்பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அதற்கு அடுத்த தெற்குபார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ம.கா.தே.ஊ.வே.உ.தி) திருமதி.ஆர்.கோகிலா என்பவரை தணிக்கைஅ செய்ய, அவர் தானாகவே தன்னுடைய இருக்கைக்கு அருகே இருந்த கைப்பையில் இருந்து பணம் ரூ.1,120/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதால் அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக மேற்படி இருக்கைக்கு அருகே நின்று கொண்டிருந்த தொரவலூர் ஊராட்சி செயலாளர் திரு.ஏ.பொன்னுச்சாமி என்பவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய வலது பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.130/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதால் அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இந்த அறையின் கிழகோட்டில் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த கணினி உதவியாளர் திரு.மு.விஜய் என்பவரை தணிக்கை செய்ய, அவர் தன்னுடைய பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூ.700/-ஐ எடுத்து தானாகவே ஆஜர் செய்தார். அந்தப்பணம் குறித்து விஜயிடம் கேட்க அவர் சொந்தப்பணம் என்று சொன்னதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இந்த அறையின் முன்புறம் வடக்குபார்த்தவாறு அமர்ந்திருந்த கணக்கர் (பொது) திருமதி.வே. யசோதா என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய பர்சில் இருந்து பணம் ரூ.1,730/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்தப்பணம் என்று சொன்னதால் அது அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இந்த வளாகத்தில் ஜீப் நிறுத்தியிருந்த இடத்தில் நின்று கொண்டிருந்த வட்டார வளர்ச்சி அலுவலரின் டிரைவர் திரு.மு.கிருஷ்ணசாமி என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய வலது பக்க பேண்டின் பர்சில் இருந்து பணம் ரூ.1,070/- இருந்ததை தானாகவே எடுத்து ஆஜர் செய்தார். இது அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதால் அந்தப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது மேற்படி தகுந்த முகாந்திரம் சொல்லாத ரூ.82,875/- பணம் மட்டும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.மேலும் இவ்வலுவலகத்தினுடைய வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சி பிரிவுகளுக்கான

அக்டோபர்-2019 மாத வருகை பதிவேட்டின் சான்றிடப்பட்ட ஜெராக்ஸ் நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது அங்குள்ள பெண் அலுவலர்கள், பெண் காவலர்களால் தனியாக தணிக்கை செய்யப்பட்டனர். மேலும் இந்த திடீர் தணிக்கையின் போது அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் கண்ணியமாக நடத்தப்பட்டனர். இந்த திடீர் தணிக்கையானது இன்று 19.15 மணிக்கு தொடங்கி 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் நடவடிக்கையானது இவ்வலுவலக கணினியின் கணக்காளர் யசோதா என்பவரால் தட்டச்சு செய்து பிரிண்ட் எடுக்கப்பட்டது. இந்த திடீர் நடவடிக்கையில் கீழ்க்கண்டவர்களால் கையொப்பம் செய்யப்பட்டது. ஒப்பம் xxxx துரைசாமி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர்-641 018, வே.கனகராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), திருப்பூர் வட்டாரம், K.R.தமிழரசன், ஊராட்சி செயலர், பொங்குபாளையம், P.மகேஷ், ஊராட்சி செயலர், பெருமாநல்லூர், K.மணிகண்டன், P.செந்தில், ஊராட்சி செயலர், கணக்கம்பாளையம், R.சிவன், G.R.முத்துக்குமார், AE, திருப்பூர் யூனியன், S.சூர்யா, Typed by me ஒப்பம் xxxx யசோதா, R.எழிலரசி, Inspr.VAC, TPR.

நான் மேற்கண்ட புகாரினையும் செயல் முறை நடவடிக்கைகளையும் மேற்கண்ட நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.82,875/-ஐயும் மற்றும் கவரையும் இன்று 23.10.2019-ம் தேதி 16.30 மணிக்கு பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.8/2019/AC/TPR u/s 7, 7(A) of P.C (Amendment) Act 2018 and 102 Cr.P.C கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், செயல் முறை நடவடிக்கைகள் ஆகியவற்றையும், பணம் ரூ.82,875/-ஐயும் மற்றும் கவரையும் கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

R. [signature]
23/10/19
Inspr VAC TPR.